வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

நாள்: 25.11.2024 நேரம்: மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், சர்வதேச கூட்டுறவு கூட்டணியின், உலகக் கூட்டுறவு மாநாட்டை தொடக்கி வைத்தார்.
- அரசியல் சாசனத்திற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக சிலர் கூறுவது, ஏற்கத் தக்கதல்ல என்று, மக்களவை தலைவர் திரு. ஓம்.பிர்லா கூறியுள்ளார்.
- குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வரும் புதன் கிழமை முதல், தமிழகத்தில் 3 நாள் பயணம் மேற்கொள்கிறார்.
- வங்கக் கடலில் உருவாகி உள்ள காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் வலுவடைந்து, தமிழகக் கரையை நோக்கி நகரக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

---

மோடி-கூட்டுறவு (17)

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லி பாரத் மண்டபத்தில், சர்வதேச கூட்டுறவு கூட்டணியின், உலகக் கூட்டுறவு மாநாட்டை தொடக்கி வைத்தார். இக்கூட்டணியின் 130 ஆண்டுகால வரலாற்றில், உலகக் கூட்டுறவு மாநாடும், பொதுக் குழுக் கூட்டமும் இந்தியாவில் நடைபெறுவது, இதுவே முதல்முறையாகும். பூட்டான் பிரதமர் திரு. ஷெரிங் டோப்கே, ஃபிஜி நாட்டின் துணை பிரதமர் திரு. மனோவா காமிகாமிக்கா ஆகியோரும் மாநாட்டில் பங்கேற்றுள்ளனர். சர்வதேச கூட்டுறவுக் கூட்டணியில், உலக நாடுகளில் இருந்து, சுமார் 30

லட்சம் கூட்டுறவு அமைப்புகளும், சுமார் 100 கோடி கூட்டுறவு உறுப்பினர்களும் இடம்பெற்றுள்ளனர். இத்தகைய கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும், புதுடெல்லியில் நடைபெறும் 6 நாள் மாநாட்டில் பங்கேற்கிறார்கள். உலக மக்கள் அனைவருக்கும், அமைதியான, வளமான எதிர்காலம் ஒன்றை, கூட்டாக உருவாக்கித் தருவதில், கூட்டுறவு அமைப்புகளின் பங்கு குறித்து, இம்மாநாட்டில் விரிவாக விவாதிக்கப் படுகிறது. இந்திய விவசாயிகள் உரக் கூட்டுறவுக் கழகம், அமுல் உள்ளிட்ட கூட்டுறவு அமைப்புகளுடன் இணைந்து, மத்திய அரசின் ஒத்துழைப்புடன், இம்மாநாட்டை நடத்துகிறது.

------------------------------

<u>மோடி நாடாளுமன்றம் (18)</u>

நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடர், இன்று தொடங்கி உள்ள நிலையில், இக்கூட்டத் தொடர் ஆக்கப்பூர்வ விவாதங்களுடன் பயனுள்ளதாக அமையும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி, நம்பிக்கை வெளியிட்டுள்ளார். குளிர்காலக் கூட்டத் தொடர் தொடங்கும் முன்பாக, இன்று புதுடெல்லியில், செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்திய அரசியல் சாசனத்தின் 75ஆம் ஆண்டு தொடங்குவதால், இம்முறை நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடர் சிறப்படைவதாகக் கூறினார். மக்களால் புறக்கணிக்கப்பட்ட சிலர், நாடாளுமன்றத்தில் அமளி ஏற்படுத்தி, அலுவல்களை கட்டுப்படுத்த முயல்வதாக, பிரதமர் தெரிவித்தார். இந்தியாவின் உலக அளவிலான மரியாதை, மற்றும், கவுரவத்தை இன்னும் மேம்படுத்தவே, நாடாளுமன்றத்தின் நேரத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், உலக அளவில் தற்போது இந்தியாவிற்கு கிடைத்துள்ள வாய்ப்பு, மிகவும் அபூர்வமானது என்றும், அவர் கூறினார். ஜனநாயகத்திலும், அரசியல் சாசனத்தின் மீதும், இந்திய மக்களுக்கு உள்ள நம்பிக்கை, மற்றும், அர்ப்பணிப்பு உணர்வை, உலகிற்கு வெளிப்படுத்துவதே, நாடாளுமன்றத்தின் செய்தியாக இருக்க வேண்டும்

என்பதால், காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப அனைவரும் நம்மை உயர்த்திக் கொள்ளுதல் அவசியம் என்று பிரதமர் மேலும் வலியுறுத்தினார்.

-------------------------------

<u>*சேர்க்கை*</u> <u>(4)</u>

இதற்கிடையே, குறிப்பிட்ட வர்த்தகக் குழுமத்திற்கு எதிரான லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் இதர பிரச்சனைகள் தொடர்பாக, எதிர்கட்சிகள் ஏற்படுத்திய அமளி காரணமாக இன்று, நாடாளுமன்ற இருஅவைகளும், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

-------------------------------

<u>*ஓம் பிர்லா*</u> <u>(17)</u>

அரசியல் சாசனத்தை குறுகிய அரசியல் கண்ணாடி மூலம் பார்க்கக் கூடாது என்பதால், அரசியல் சாசனத்திற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக சிலர் கூறுவது, ஏற்கத் தக்கதல்ல என்று, மக்களவை தலைவர் திரு. ஓம்.பிர்லா கூறியுள்ளார். அரசியல் சாசன தினம் நாளை கொண்டாடப் படுவதை முன்னிட்டு, இன்று, ஆகாசவாணி செய்தியாளருக்கு பிரத்யேக பேட்டி அளித்த அவர், அரசியல் சாசனம் நாட்டு மக்களுக்குரியது என்றும், சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினருக்கும் அரசியல் சாசனம் மீது நம்பிக்கை இருப்பதாகக் கூறினார். 140 கோடி இந்தியர்களின் புனிதப் புத்தகமே அரசியல் சாசனம் என்றும், சமூகப் பொருளாதார மாற்றத்திற்கான ஊற்றுக் கண்ணாகவே, அரசியல் சாசனம் திகழ்வதாகவே அவர் தெரிவித்தார். அரசியல் சாசனத்தை வகுத்துக் கொடுத்த அரசியல் நிர்ணய சபையில் இடம்பெற்ற விவாதங்களை அனைவரும் அறிந்து கொண்டு, அதிலிருந்து உணர்வூக்கம் பெறுதல் அவசியம் என திரு. ஓம் பிர்லா வலியுறுத்தினார். இடஒதுக்கீடு குறித்த கேள்வி ஒன்றுக்கு அவர் பதில் அளிக்கையில், அரசியல் கட்சிகள் இதுகுறித்து, குற்றச்சாட்டுகள், மற்றும்,எதிர் குற்றச்சாட்டுகளை வெளியிடலாம் என்றாலும், இடஒதுக்கீட்டில் கை வைக்க, எந்தவொரு அரசும், எப்போதும் முயன்றதில்லை என்றார்.

-------------------------------

*அரசியல் சாச□ தி□ ம் (16)*

அரசியல் சாசன தினம் நாளை கடைபிடிக்கப் படுவதை முன்னிட்டு, நமது அரசியல் சாசனம்-நமது சுய கௌரவம் என்ற தலைப்பில், புதுடெல்லியில் இன்று நடைபெற்ற பாத யாத்திரையில், மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கலந்து கொண்டார். மத்திய அமைச்சர்கள் திரு. பியூஷ் கோயல், திரு. தர்மேந்திர பிரதான், திரு. கஜேந்திர சிங் ஷெகாவத், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒலிம்பிக் வீரர்கள், மற்றும், இளைஞர்கள் பலரும் இந்த நடைபயணத்தில் கலந்து கொண்டு, அரசியல் சாசனத்தில் முன்னுரையாக இடம்பெற்றுள்ள உறுதிமொழியை ஏற்றுக் கொண்டனர். அரசியல் சாசன மாண்புகள் குறித்து இளைஞர்களிடையே விழிப்புணர்வை மேம்படுத்தும் வகையில், பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகள், கண்காட்சிகள், மற்றும், கலந்துரையாடல் அமர்வுகளும் நடைபெற்றன. பாதயாத்திரையின் முடிவில், அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா செய்தியாளர்களிடம் பேசுகையில், அரசியல் சாசனம் குறித்து இளைஞர்களிடையே காணப்படும் உற்சாகத்தை வைத்துப் பார்க்கையில், 2047 ஆம் ஆண்டிற்குள் இந்தியா, முன்னேறிய நாடாக நிச்சயம் மேம்படும் என்றார்

-------------------------------

*ரயில்வே (11)*

கடந்த 10 ஆண்டுகளில் நாட்டில், ரயில்வே துறையில் 5 லட்சம் புதிய ஊழியர்கள் வெளிப்படையான முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியமர்த்தப் பட்டுள்ளதாக, ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். அதற்கு முந்தைய 10 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை, 4 லட்சத்து 40 ஆயிரமாக மட்டுமே இருந்ததாக, அவர் இன்று நாக்பூரில், அகில இந்திய எஸ்.சி-எஸ்.டி ரயில்வே ஊழியர் சங்கத்தின் தேசிய மாநாட்டில் பேசுகையில் கூறினார். ரயில்வே துறையில் ஆள்

சேர்ப்புப் பணிக்கு, வருடாந்திர நாட்காட்டி வெளியிடப்பட்டு இருப்பதும், இதுவே முதல்முறை என்று அவர் தெரிவித்தார்.

முன்னதாக, நாக்பூர் தீக்ஷா பூமியில் உள்ள அண்ணல் அம்பேத்கர் மத்திய நினைவகத்தில், ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் மலரஞ்சலி செலுத்தினார்.

-------------------------------

<u>முர்மு-தமிழ்நாடு</u> (8)

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வரும் புதன் கிழமை முதல், தமிழகத்தில் 3 நாள் பயணம் மேற்கொள்கிறார். வரும் வியாழக் கிழமை, ஊட்டி வெலிங்டன்னில், ராணுவப் பயிற்சிக் கல்லூரி நிகழ்ச்சியில் அவர் கலந்து கொள்கிறார். அன்றைய தினம், நீலகிரி பகுதியைச் சேர்ந்த பழங்குடி மக்களுடன் அவர் கலந்துரையாடுவார். வரும் சனிக்கிழமையன்று அவர் கோவை வழியாக திருவாரூர் சென்று, தமிழ்நாடு மத்திய பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வார் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

-------------------------------

<u>தமிழ்நாடு சட்டமன்றம்</u> (6)

தமிழ்நாடு சட்டப் பேரவையின் குளிர்காலக் கூட்டத் தொடர், அடுத்த மாதம் 9ஆம் தேதி தொடங்க உள்ளது. சட்டப் பேரவைத் தலைவர் திரு. அப்பாவு, இன்று பேரவைத் தலைவர் அறையில், செய்தியாளர்களிடம் பேசுகையில் இதை தெரிவித்தார். குளிர்காலக் கூட்டத் தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து, தொடக்க நாளான 9ஆம் தேதி, அவையின் அலுவல் ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

-------------------------------

பெயர் மாற்றம் (10)

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், நங்கநல்லூர் மெட்ரோ ரயில் நிலையத்திற்கு, OTA மெட்ரோ ரயில் நிலையம் எனப் பெயர் மாற்றம் செய்துள்ளது. புதிய பெயருடன் கூடிய பெயர்ப் பலகையை, தென்னிந்திய பகுதிக்கான ராணுவ தளபதி லெஃப்டினன்ட் ஜெனரல் கே.எஸ் பிரார், இன்று திறந்து வைத்தார். OTA என்னும் ராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரிக்கு புகழாரம் சூட்டும் வகையிலும், ராணுவத்திற்கும், சென்னை மக்களுக்கும் இடையிலான தொடர்புகளைக் கொண்டாடும் விதத்திலும், இந்த பெயர் மாற்றம் அமைந்து இருப்பதாக அவர் கூறினார். இளைஞர்களிடையே, தேச சேவை மற்றும் தேசப் பற்றை வளர்ப்பதில், இந்த பெயர் மாற்றம் உதவிகரமாக இருக்கும் என்றும், அவர் குறிப்பிட்டார்.

------------------------------

திரைப்பட விழா (17)

கோவாவில் நடைபெறும் 55ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில், இன்று முதல் பிராந்திய மொழி திரைப்படங்களுக்கு முக்கிய கவனம் செலுத்தப் படுகிறது. பிராந்திய மொழி திரைப்படங்கள், கலாச்சாரத்தில் ஆழமாக வேரூன்றியவை என்று, கெரேபேட்டே கன்னட திரைப்படத்தின் நடிகர் கௌரிசங்கர் கூறினார். இண்டியன் பனோரமா பிரிவில் இடம்பெறும் மற்றொரு திரைப்படமான மகாஅவதார் நரசிம்மா மராட்டிய திரைப்படத்தின் இயக்குநர் அஷ்வின் குமார் உள்ளிட்ட திரையுலக பிரமுகர்களும் விழாவில் பங்கேற்றுள்ளனர். இன்றைய தினம் திரைப்பட விழாவில், மொத்தம் 75 திரைப்படங்கள் திரையிடப் படுகின்றன. இதுஅல்லாது, பாலிவுட் நடிகை கிரீத்தி சனோன், இவ்வாண்டு ஆயுட்கால சாதனைக்கான சத்யஜித் ரே விருது பெறும் ஆஸ்திரேலிய திரைப்பட இயக்குநர் ஃபிலிப் நோய்ஸ் உள்ளிட்டவர்களின் பங்கேற்புடன் குழு விவாதங்களும் இடம்பெறுகின்றன. புதிய ஹாலிவுட்டில் வெற்றி பெறுவது எப்படி என்பது குறித்து, ஃபிலிப் நோய்ஸ்

இன்றைய தினம் மாஸ்டர்-கிளாஸ் நடத்துகிறார். பெண்கள் தலைமையிலான சினிமா என்பது குறித்து, கிரீத்தி சனோன் நிகழ்த்தும் உரையும் இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் இன்று மாலை இடம்பெறுகிறது.

------------------------------

<u>வானிலை 1 (18)</u>

வங்கக் கடலில் நேற்று நிலவிய ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, இன்று காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுவடைந்து, நாகப்பட்டினத்திற்கு தென்கிழக்கே, 880 கி.மீ தொலைவிலும், புதுச்சேரிக்கு தென்கிழக்கே, 980 கி.மீ தொலைவிலும், சென்னைக்கு தென்கிழக்கே, ஆயிரத்து 50 கிலோ மீட்டர் தொலைவிலும் நிலை கொண்டுள்ளது. இது வடமேற்கு திசையில் நகர்ந்து, அடுத்த 24 மணி நேரத்தில், ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும் என்றும், அதற்கடுத்த 2 நாட்களில், தமிழகம், மற்றும், இலங்கை கடற்கரையை நோக்கி நகரக் கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக, தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், மேலும் சில நாட்களுக்கு மழை நீடிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. இன்றைய தினம், மயிலாடுதுரை, சிவகங்கை, அரியலூர், கடலூர் மாவட்டங்கள், மற்றும், காரைக்கால் பகுதியில் ஓரிரு இடங்களில் கனமழைக்கும், தஞ்சை, நாகை, திருவாரூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், மிக கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக, வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. தமிழக கடலோரப் பகுதிகள், மற்றும், வங்கக் கடல் பகுதிகளில், சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல

வானிலை 2 (6)

வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். ஏற்கனவே, ஆழ்கடலுக்கு சென்றுள்ள மீனவர்கள், இன்றே கரை திரும்பவும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. இதற்கிடையே, புதுச்சேரி மற்றும் காரைக்கால் துறைமுகங்களில் 1ஆம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப் பட்டுள்ளது. கடல் சீற்றமாக காணப்படுவதால், மீன்வளத் துறை அறிவுறுத்தலின் பேரில், புதுச்சேரியில் இன்றைய தினம் மீனவர்கள் கடலுக்குள் செல்லவில்லை.

------------------------------

கிரிக்கெட் *(10)*

இந்தியா-ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையே, ஆஸ்திரேலியாவின் பெர்த் நகரில் நடைபெற்ற, பார்டர் – கவாஸ்கர் கோப்பைக்கான, முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், இந்தியா, 295 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இப்போட்டியின் 4ஆம் நாளான இன்று, 534 என்னும் வெற்றி இலக்குடன், 2ஆவது இன்னிங்சை தொடர்ந்து ஆடிய ஆஸ்திரேலிய அணி, இலக்கை எட்ட முடியாமல் ஆட்டமிழந்து, தோல்வி அடைந்தது. ஸ்கோர் விவரம்-

இந்தியா முதல் இன்னிங்ஸ் – 150 ரன்

2ஆவது இன்னிங்ஸ் – 487 ரன் டிக்ளேர்.

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸ் – 104 ரன்

2ஆவது இன்னிங்ஸ் – 238 ரன்

------------------------------

பால்வளம் (11)

இந்திய வெண்மைப் புரட்சியின் தந்தை என போற்றப்படும் டாக்டர் வர்கீஸ் குரியன் பிறந்தநாள், நாளை புதுடெல்லியில், தேசிய பால்வள தினமாக கொண்டாடப் படுகின்றது. இந்திய பொருளாதாரத்திற்கும், நாட்டு மக்களின் ஊட்டச் சத்து பாதுகாப்பிற்கும் பால்வளத் துறை ஆற்றி

வரும் முக்கிய பங்களிப்புகளை கொண்டாடும் வகையில் இந்நிகழ்ச்சி அமையும் என்று, மத்திய கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை தெரிவித்துள்ளது. இத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங், நாளைய விழாவின் போது, தேசிய கோபால் ரத்னா விருதுகளை வழங்கி சிறப்பிக்கிறார். நாடெங்கிலும் இருந்து, பெரும் எண்ணிக்கையிலான விவசாயிகளும், கூட்டுறவு பால் பண்ணைகள் மற்றும் பால்வள கூட்டமைப்புகளின் பிரதிநிதிகளும், விழாவில் பங்கேற்க உள்ளனர்.

-------------------------------